الدرس الثالث
القبر

பாடம் - 3
மண்ணறை

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ أَنَّ رَسُولَ الله ﷺ قَالَ إِنَّ الْعَبْدَ إِذَا وُضِعَ فِي قَبْرِهِ وَتَوَلَّى عَنْهُ أَصْحَابُهُ وَإِنَّهُ لَيَسْمَعُ قَرْعَ نِعَالِهِمْ أَتَاهُ مَلَكَانِ فَيُقْعِدَانِهِ فَيَقُولَانِ مَا كُنْتَ تَقُولُ فِي هَذَا الرَّجُلِ لِمُحَمَّدٍ ﷺ فَأَمَّا الْمُؤْمِنُ فَيَقُولُ أَشْهَدُ أَنَّهُ عَبْدُ الله وَرَسُولُهُ فَيُقَالُ لَهُ انْظُرْ إِلَى مَقْعَدِكَ مِنْ النَّارِ قَدْ أَبْدَلَكَ الله بِهِ مَقْعَدًا مِنْ الْجَنَّةِ فَيَرَاهُمَا جَمِيعًا قَالَ قَتَادَةُ وَذُكِرَ لَنَا أَنَّهُ يُفْسَحُ لَهُ فِي قَبْرِهِ وَأَمَّا الْمُنَافِقُ وَالْكَافِرُ فَيُقَالُ لَهُ مَا كُنْتَ تَقُولُ فِي هَذَا الرَّجُلِ فَيَقُولُ لَا أَدْرِي كُنْتُ أَقُولُ مَا يَقُولُ النَّاسُ فَيُقَالُ لَا دَرَيْتَ وَلَا تَلَيْتَ وَيُضْرَبُ بِمَطَارِقَ مِنْ حَدِيدٍ ضَرْبَةً فَيَصِيحُ صَيْحَةً يَسْمَعُهَا مَنْ يَلِيهِ غَيْرَ الثَّقَلَيْنِ (خ/ ١٣٧٤، نس/ ٢٠٢٤)

**நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்:** ‘மனிதன் மண்ணறையில் வைக்கப்பட்டு அவனுடைய நண்பர்கள் அவனை விட்டும் திரும்பிச் செல்லும்போது அவன் அவர்களின் செருப்பின் ஓசையைக் கேட்பான். இரு மலக்குகள் அவனை உட்கார வைத்து இம்மனிதரைப் பற்றி நீ என்ன கூறிக்கொண்டிருந்தாய்? என அவனிடம் கேட்பார்கள். ஒரு முஃமின் (ஏக இறைவனை நம்பியவன்), இவர் அல்லாஹ்வின் அடியாரும் அவனது தூதருமாவார் என நான் சாட்சி கூறினேன் என்று கூறுவான். நரகத்தில் உனது இருப்பிடத்தைப் பார். இதற்குப் பகரமாக சொர்க்கத்தில் ஒரு இருப்பிடத்தை அல்லாஹ் உனக்கு ஏற்படுத்தி விட்டான் என அவனிடம் கூறப்படும். அவ்விரண்டையும் அவன் பார்ப்பான். ஒரு காஃபிர் (ஏக இறைவனை மறுத்தவன்) அல்லது நயவஞ்சகனிடம் இம்மனிதரைப்பற்றி நீ என்ன கூறிக்கொண்டிருந்தாய்? எனக் கேட்கப்படும். அதற்கவன், எனக்குத் தெரியாது, மக்கள் கூறியதைக் கூறிக்கொண்டிருந்தேன் எனக்கூறுவான். அப்போது அவனிடம் நீ அவரை அறிந்துகொள்ளவுமில்லை, பின்பற்றவுமில்லை எனக்கூறப்படும். பிறகு அவன் மீது இரும்புச் சம்மட்டியால் ஓங்கி அடிக்கப்படும். அப்போது அவன் அலறுவான். அதை மனிதர்களையும் ஜின்களையும் தவிர அனைவரும் கேட்பார்கள்.’ (புகாரி-1374, நஸயீ-2051)

பிரிந்த உயிர் மண்ணறையில் மீண்டும் உடலுக்கு கொண்டு வரப்படும் என்பது இவ்வுலகில் மனித அறிவு விளங்கிக்கொள்ள முடியாத மறுமை சம்பந்தப்பட்ட விஷயமாகும். பின்வரும் விஷயத்தில் முஸ்லிம்கள் அனைவரும் ஏகோபித்த முடிவில் உள்ளனர். அதாவது மனிதன் (ஏக

இறைவனை) நம்பிக்கை கொண்டவனாகவும் மண்ணறையின் இன்பத்திற்குத் தகுதியுள்ளவனாகவும் இருந்தால் மண்ணறையில் இன்பம் அனுபவிப்பான். அல்லது அவன் வேதனைக்குத் தகுதியுடையவனாக இருந்து அல்லாஹ் அவனை மன்னிக்கவில்லையெனில் வேதனை செய்யப்படுவான்.

﴿النَّارُ يُعْرَضُونَ عَلَيْهَا غُدُوًّا وَعَشِيًّا وَيَوْمَ تَقُومُ السَّاعَةُ أَدْخِلُوا آلَ فِرْعَوْنَ أَشَدَّ الْعَذَابِ﴾ [ غافر:٤٦]

அல்லாஹ் கூறுகிறான்: 'காலையிலும் மாலையிலும் நரக நெருப்பு முன் அவர்கள் கொண்டு வரப்படுவார்கள். மேலும் மறுமை நாள் வரும்போது "ஃபிர்அவ்னின் கூட்டத்தாரை கடுமையான வேதனையில் புகுத்துங்கள்" எனக் கூறப்படும்.' (40:46)

((تَعَوَّذُوا بِاللهِ مِنْ عَذَابِ الْقَبْرِ)) (م/ ٢٨٦٧)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'மண்ணறையின் வேதனையை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுங்கள்.' (அபூதாவூத்-5518)

சீரான அறிவு மண்ணறை வேதனையை மறுக்காது. காரணம் இதுபோன்ற நிலையை மனிதன் தன் வாழ்வில் பார்க்கத்தான் செய்கிறான். உதாரணமாக தூங்கக்கூடிய ஒருவன் கனவில் கடினமாக வேதனை செய்யப்படுவதாக உணர்ந்து சப்தமிடுகிறான், உதவியும் தேடுகிறான். ஆனால் அவனுக்கு அருகில் இருப்பவன் இதை உணர்வதில்லை. ஆனாலும் மரணத்திற்குப் பின்பு நடைபெறும் நிகழ்வுகளுக்கும் உலகில் உயிரோடு இருக்கும்போது நிகழும் விஷயங்களுக்கும் இடையில்
மிகப்பெரிய வேறுபாடு உள்ளது. மண்ணறை வேதனை உடலுக்கும் உயிருக்கும் சேர்த்து அளிக்கப்படுவதாகும்.

عن عُثْمَانَ ﷺ أَنَّ رَسُولَ الله ﷺ قَالَ: إِنَّ الْقَبْرَ أَوَّلُ مَنْزِلٍ مِنْ مَنَازِلِ الْآخِرَةِ فَإِنْ نَجَا مِنْهُ فَمَا بَعْدَهُ أَيْسَرُ مِنْهُ وَإِنْ لَمْ يَنْجُ مِنْهُ فَمَا بَعْدَهُ أَشَدُّ مِنْهُ . (ت/ ٢٣٠٨)

நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: 'மண்ணறை என்பது மறுமையின் நிலை களில் முதல் நிலையாகும். இதில் இருந்து ஒருவன் ஈடேற்றம் பெற்றுவிட்டால் இதன் பிறகு உள்ளவை இதை விட எளிதானதாகும். இதிலிருந்து அவன் ஈடேற்றம் பெறாவிட்டால் இதற்குப் பின்னுள்ளவை இதைவிடக் கடினமானதாகும்.' (திர்மிதி-2308)

எனவே மண்ணறை வேதனையிலிருந்து முஸ்லிம்கள் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுவது அவசியமாகும். குறிப்பாக தொழுகையில் ஸலாம் கொடுப்பதற்கு முன் பாதுகாவல் தேட வேண்டும்.

இவ்வாறே மண்ணறையின் வேதனைக்கும் நரகத்தி னுடைய வேதனைக்கும் முதற் காரணமான பாவங்களிலிருந்து விலகுவதற்கு நல்லார்வம்காட்ட வேண்டும். மண்ணறை வேதனை என்று சொல்லப் படுவதற்குரியகாரணம் பெரும்பாலும் மக்கள் மண்ணறையில் தான் அடக்கம் செய்யப்படுகிறார்கள் என்பதனால்தான். ஆனால் நீரில்மூழ்கியவர், நெருப்பில் எரிந்துபோனவர், மிருகங்களால் தின்னப்பட்டவர் போன்றவர்கள் பர்ஸக்- எனும் திரைமறைவு உலகில் வேதனை செய்யப்படுவார்கள் அல்லது இன்பம் வழங்கப்படுவார்கள்.

மண்ணறை வேதனை என்பது இரும்பு போன்ற சம்மட்டியால் அடிக்கப்படுவது அல்லது அவனது விலா எலும்புகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணையுமளவுக்கு நெருக்கப்படுவது, மண்ணறையில் இருள் நிரப்பப்படுவது, நெருப்பினாலான விரிப்பு விரிக்கப்படுவது, நரகிலிந்து ஒரு வாசல் திறந்து வைக்கப்படுவது, அவனின் தீய செயல்கள் துர்நாற்றமுள்ள, அருவருப்பான முகமுடைய மனிதன் போன்று உருவெடுத்து அவனுடன் அமர்ந்திருப்பது... இப்படிப் பலவிதத்தில் ஏற்படும்.

அடக்கம் செய்யப்பட்ட மனிதன் இறைநிராகரிப்பாள னாகவோ, நயவஞ் சகனாகவோ இருந்தால் வேதனை நிரந்தரமாக இருக்கும். பாவம் செய்த இறைநம்பிக்கையாளனாக இருந்தால் அவன் செய்த பாவம் அளவிற்கு பல்வேறு வேதனைகள் கொடுக்கப்படும். சிலசமயம் வேதனை நிறுத்தப்படும்.

ஆனால் நம்பிக்கையாளன், மண்ணறையில் அருள் பாலிக்கப்படுவான். அதாவது அவனது மண்ணறை விசாலமாக்கப்பட்டு ஒளி பாய்ச்சப்படும். சொர்க்கவாசல் திறக்கப்பட்டு அதன் வழியாக அதன் நறுமணம் வீசிக்கொண்டிருக்கும். சொர்க்கத்தின் விரிப்பு விரிக்கப்படும். அவனது நற்செயல் அழகிய மனிதவடிவில் உருவெடுத்து மண்ணறையில் அவனை மகிழ்விக்கும்.